



# பட்டுவளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

## மானியக் கோரிக்கை எண். 18

அறிவிப்புகள்

2017–2018

# பட்டு வளர்ச்சி மற்றும்
# கைவினைப் பொருட்கள்

**மானியக் கோரிக்கை எண். 18**

## அறிவிப்புகள்
## 2017 – 2018

பா. பென்ஜமின்
ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்

பட்டு வளர்ச்சித் துறை

## 1. உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்

உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2017–2018–ஆம் ஆண்டில், ஒரு ஏக்கருக்கு 10,500/– ரூபாய் வீதம் 3,500 ஏக்கரில் மல்பெரி நடவு செய்திட **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 367.50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 2. மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவித்தொகை வழங்குதல்

நீர் ஆதாரங்களை சிக்கனமாகப் பயன்படுத்தி, நீர் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், 2017–2018–ஆம் ஆண்டில், 1,000 ஏக்கர் பரப்பிலான மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு உதவிடும் நோக்கில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 250.00 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 3. பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்

சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, பட்டுக்கூடு உற்பத்தி செய்யவும், பட்டுக்கூடுகள் தரத்தினை உயர்த்திடவும் தனித்தனி புழுவளர்ப்புக் குடில்கள் அமைப்பதற்கு ஒவ்வொன்றிற்கும், அதன் பரப்பிற்கேற்ப முறையே 63,000/– ரூபாய் அல்லது 82,500/– ரூபாய் அல்லது 87,500/– ரூபாய் வீதம் 2017–2018-ஆம் ஆண்டில், 800 பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 648.50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 4. நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் / பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல்

வெண்பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக் கூடுகளின் தரம், உற்பத்தி திறன் அதிகரித்திட, 2017–2018 – ஆம் ஆண்டில், 1,000 விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்க **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 525.00 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 5. வெண்பட்டு முட்டை தொகுதிகளுக்கு போக்குவரத்து செலவினத் தொகை வழங்குதல்

விவசாயிகளிடையே வெண்பட்டு முட்டை வளர்ப்பினை ஊக்குவிக்கவும், மாநில அரசு உற்பத்தி செய்யும் வெண்பட்டு முட்டைத் தொகுதி விநியோகத்தினை அதிகரித்திடவும், 2017–2018–ஆம் ஆண்டில், 30 இலட்சம் வெண்பட்டு முட்டை தொகுதிகளுக்கு போக்குவரத்து செலவினத் தொகையாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 30.00 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 6. வெண்பட்டு நூலுக்கு ஊக்குதவித் தொகை வழங்குதல்

வெண்பட்டு நூலின் தரம், உற்பத்தி அதிகரித்திட 2017–2018–ஆம் ஆண்டில் தரமான வெண்பட்டு நூல் உற்பத்தி செய்யும் பட்டு நூற்பாளர்களுக்கு கிலோ ஒன்றுக்கு 100/– ரூபாய் வீதம், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 20,000 கிலோகிராம் வெண்பட்டு நூலுக்கு 20.00 இலட்சம் ரூபாய் ஊக்குதவித் தொகை வழங்கப்படும்.

## 7. பட்டு வளர்ச்சித்துறையில் அத்தியாவசிய பணியிடங்களான இளநிலை ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்புதல்

பட்டு விவசாயிகளின் தேவைகளை கள அளவில் நிறைவேற்றுவதும், சமீப காலத் தொழில்நுட்பங்களை பட்டு விவசாயிகளுக்கு எடுத்துச் செல்வதும் இளநிலை ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோரது பணியாகும். துறையில் தற்போது காலியாக உள்ள 13 உதவி ஆய்வாளர் மற்றும் 395 இளநிலை ஆய்வாளர் பணியிடங்கள் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 2017–2018–ஆம் ஆண்டில் நிரப்பப்படும்.

## 8. சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்

2017–2018–ஆம் ஆண்டில் வெண்பட்டுக் கூடுகள் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை கடைபிடித்து, 100 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு 80 கிலோகிராம் மற்றும் அதற்கு மேல் உற்பத்தி செய்யும் விவசாயிகளில், மாவட்ட அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 25,000/–ரூபாய், 20,000/– ரூபாய், 15,000/– ரூபாய் பரிசு வழங்கவும் மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிக்கு முறையே 1,00,000/– ரூபாய், 75,000/– ரூபாய், 50,000/– ரூபாய் பரிசு வழங்கவும் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** பரிசுத் தொகையாக 20.85 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.